24

உ

ஶிவதத்த்வ ஸுதாநிதியாம்

வைராக்ய ப்ரகரணம், ஸம்ஸாரதூஷணம் ச॥

சிவதத்வ ஸுதா நிதியில்,

# வைராக்ய பிரகரணம்,

# ஸம்சார தூஷணமும்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் மடம்

ஆஸ்தான வித்வான் பிரும்மஸ்ரீ

**கச்சபேச்வர சாஸ்திரிகள் அவர்களால்**

மொழிபெயர்க்கப்பட்டு,

நல்லிச்சேரி

**அருணசல சாஸ்திரிகளால்**

கும்பகோணம் "ஸ்ரீகோபாலவிலாஸ பிரஸ்ஸில்"

பதிப்பித்து பிரசுரிக்கப்பட்டது.

விபவ௵ மார்கழிமீ

1928. [அணா 1½

THE REGISTRAR No. JAN 29 MADRAS

R6

N28

4 8 2 0 8

உ

ஸ்ரீக்ருஷ்ணாய வ்யாஸரூபிணே நம: ॥

சிவதத்வஸுதாநிதியில்

# வைராக்கிய ப்ரகரணம்.

[illegible] ॥

[illegible] ॥

ஓ ஸனத்குமாரரே ஸம்ஸாரத்தை நீக்கவேண்டிய உபாயம் சொல்லுகிறோம் கேளும். சந்தனம் புஷ்பம் மாதர்கள் என்றும் விஷயங்களிலேயே பற்றிய மனதையுடையவனுக்கு விஷயங்கள் அமிர்தம்போல் தோன்றுகிறதுகள். (1) அவித்யை யென்றும் இருட்டிலிருந்து அநாதிகாலந்தொடங்கி தேக்கப்பட்டிருக்கும் ஸம்ஸாரமென்னும் சர்க்கரைப் பாகுபோன்ற மது விஷயங்களால் இனிப்புடையதாயினும் சிவாநந்தமென்னும் தேன்பாகு ருசியறிந்த மகாத்மாவுக்கு மேற்கூறிய சர்க்கரைப் பாகுபோன்ற ருசியானது சூலங்களை நட்டு மூடிய கிணறுபோல் தோன்றுவதோடு விஷயங்களும் விஷம்போல் தோன்றுகிறது. (2½)

OFFICE OF THE REGISTRAR OF ... No. ... - JAN 1929 MADRAS

148348



அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், மோகம் என்னும் ஐவகையான கிலேசங்களாகிற அலைகளும் தோற்றமென்னும் சுழல்களும் பெண்டு பிள்ளை மித்திரன் பணம் பந்து என்னும் மீன்களும் காமமாகிற படபாக்கினியும் கோபமென்னும் ஜலத்தால் நிரம்பியதுமான இந்த கோர ஸம்ஸாரக்கடலில் சுகமேது (3)

பண்டிதர்களாயினும் ஸாரமில்லாததான ஸம்ஸாரத்தில் மூழ்கிறார்கள் மோகத்தின் வைபவமானது ஆச்சரியப்படக்கூடியது. இக்கடலைத்தாண்ட எவன் சக்தியுள்ளவனோ. (4) ஸம்ஸாரமென்னும் பாழுங்கிணற்றில் மூழ்கி விழுந்தவனுக்கு சுகமெப்படி யுண்டாகும். (5) குழந்தை பருவத்தில் இந்திரியங்களும் அதன் வியாபாரங்களும் பலப்படாததினால் பேசவேண்டுமென்றும் காரியம்செய்யவேண்டுமென்றும் மனதில்தோன்றுமேதவிர செய்ய முடிவதில்லை இது பெருந்துக்கத்தை கொடுக்கிறது. (6) பல் முளைத்த பருவத்திலும் மூடத்தனத்தாலும் பலவிதமாந்தம்முதலிய நோய்களாலும் பாலாரிஷ்டதோஷத்தால்ஏற்படும் பீடைகளாலும் பெரும் துக்கமுண்டாகிறது. (7) மண்தின்னவேண்டுமென்று ஆசைகொண்டு மண்

ணில் புரட்டியதேகத்தோடு ஓர் மூலையில் அழுது கொண்டிருக்கிறான் மலம் மூத்திரம் முதலியவைகளை கூட தெரியாததன்மையால் தின்னுகிறான். (௮) கௌமாரமென்னும் ஐந்தாவது வயதில் கர்ணவேதமென்கிற காதுகுத்து கல்யாணம் முதலியவைகளாலும் தாய்தந்தைகளுடைய சிக்ஷைகளாலும் எழுத்து வரும்படி போதித்தலாலும் உபாத்தியாயரின் சிக்ஷையாலும் துக்கமுண்டாகிறது. (9) மதத்தினால் ஏற்பட்ட இந்திரியவியாபாரமானதால் காமமென்பது தோஷத்தை செய்கிறது காமத்தில் அதிகாசைகொண்டவனுக்கு யௌவனத்தில்தான் ஸுகமேபது. (10) ஈருஷை, பொறாமைகள், பெரும் துக்கம், மோகத்தினால் ஆசையுண்டாகிறது ஆசைகொண்டவன் காமத்தில் பிரவர்த்திக்கிறான் ஆகையால் மோகமென்பது பெருந்துன்பத்தை தருகிறது. (11) காமமென்னும் நெருப்பால் எரிக்கப்பட்டவனாக ராத்திரியில் தூங்குவதில்லை பணம்சம்பாதிக்கும்கவலையினால் பகலிலும்சுகம் கிடையாது. (12) எக்காலத்திலும் காமங்களை அனுபவித்தலால் காமம் ஒழிவடையாது நெய் முதலிய ஹவிஸ்ஸால் அக்கினிபோல் மறுபடியும் அதிகப்படுகிறது. (13) ஸ்திரீவிஷயத்தில் அதிகசிரமத்தை

அடைந்தமேகத்தையுடைய புருஷனுடைய சுக்கிலத்திலேகளானது ஸுகமென்று நினைக்கக்கூடாது ஆனால் தேகத்தின் வியர்வை யென்றுதான் நினைக்கவேண்டும். (14) கிரிமிகளால் புண்படுத்தப்படுகிற குஷ்டம் சொரி பிடித்தவனுக்கு சொரியுவதும் சூடுபோடுவதும் எப்படியோ அதுபோலவே ஸ்திரீகளிடத்திலுள்ள சுகம். (15) சொரிவதினால் வெளிவரும் சீழ் முதலியதில் எவ்விதசுகமோ அதுபோல் ஸ்திரீகளிடத்திலுள்ள சுகத்தை நினைக்கவேண்டும் அவர்களிடத்தில் அதிகம் ஒன்றுமில்லை. (16) பிளக்கப்பட்ட மூங்கில் கணுவுனுடையபோல் ஸ்திரீகளிடத்தில் வாஸ்தவமான ஸுகம் கிடையாது. (17) ஜலமலங்களை விடுவதினால் மனிதனுக்கு ஏற்படும் சுகம்போல் ஸ்திரீவிஷய சுகத்தையும் நினைக்கவேண்டும் மூடர்கள் வேறாகநினைக்கிறார்கள் (18) ஸமஸ்த தோஷங்களுக்கு இருப்பிடமாகிய ஸ்திரீகளிடத்தில் விசாரணை செய்தால் அணுமாத்திரங்கூட சுகம் கிடையாது (19) யௌவனகாலத்தில் மானபமானங்களை விட்டு அதிக சுகமென்று எவ்வித இடையூறு மில்லாமல் அனுபவித்து கிழத்தனம் வந்ததுபோலிருக்கும் சக்தியற்றவனும்

சதை சுருக்கியும் வெளுப்பு நிரையும் ஸ்திரீ போகமும் இவைகளால் தளந்துபோன சரீரத்தையுடையவனாகவும் எவ்வித செய்கையும் செய்ய சக்தியற்றவனாகிறான். (20, 21) ஸ்திரீ புருஷர்களுக்கு யௌவன காலத்தில் ஒருவர்க்கொருவர் எவ்வித அழகும் பிரியமும் இருந்ததோ, இது கிழட்டுத்தனம் வந்ததும் இரண்டுபேர்களுக்கும் பிரியங்கள் போய்விடுகிறது. (22) முன்போலல்லாமல் இப்பொழுது கிழட்டுத்தனத்தால் வியாபிக்கப்பட்ட இந்த சரீரத்தைப் பார்த்து எவன் வைராக்கியமடையவில்லையோ அவனைவிட புத்தியற்றவன் எவன் (23) கிழட்டுத்தனத்தால் வியாபிக்கப்பட்ட புருஷன் சக்தியற்றவனாயிருப்பதினால் பெண்டுபிள்ளை பந்துக்கள் வேலைக்காரர்கள் இவர்களால் அவமதியடைகிறான். (24)

தர்மார்த்த காமமோக்ஷங்களாகிய நான்கு புருஷார்த்தங்கள் மாத்திரம் அழிகிறதில்லை ஆகையால் தர்மாதிகளை தருணகாலத்தில் சக்தியை அனுசரித்துச்செய்துக்கொள்ளவேண்டும். (25) வாதபித்த கபமென்கிற தோஷங்களின் ஏத்தகுறைவினால் வியாதி ஏற்படுகிறது. இந்த தேகமானது வாதம் முதலியவைகளின் கூட்ட

த்தினுல் ஏற்பட்டது. (26) இம்மாதிரியான தேகமானது என்னைச் சேர்ந்தது என்று எவன் நினைக்கிறானோ அவன்தான் ஸம்ஸாரத்தில் ஈடுபட்டமூடனென்று அரியவேண்டும். (27) இந்த தேகமானது அன்னமளித்து போஷிப்பவனைச்சேர்ந்ததா அல்லது பிதாவைச்சேர்ந்ததா அல்லது மாதாவைச்சேர்ந்ததா அல்லது மாதாமகனைச்சேர்ந்ததா விலைக்கு வாங்கியவனைச் சேர்ந்ததா அல்லதுபாராவது ஒருவேருமனிதனைச்சேர்ந்ததா என்று விசாரிக்கவேண்டும். (28) இந்த தேகமானது மிகவும் மலினமானது மலமூத்திரங்களுக்கு இருப்பிடமானது எலும்புகளால் செய்யப்பட்ட கூடு நரம்புகளால் கட்டப்பட்டு ரத்தம் மஜ்ஜை இவைகளால் பூசப்பட்டு பித்தாதிகளால் நிரம்பி தோலினுல் சுத்தப்பட்டு ஒன்பது துவாரமுள்ளதும் விசித்திரமானதும் சர்வதுவாரங்களும் எப்பொழுதும் அசுத்தங்களை வெருக விட்டுக்கொண்டிருக்கிறது. (29) (30½) தேகத்தில் சம்பந்தித்ததான புஷ்பம் சந்தனம் வஸ்திரம் இவைகளும் அசுத்தமாகிவிடுகிறது ஆகையால் தேகத்தை சுத்தமென்று நினைக்கக்கூடாது. இனிப்புமுதலிய ஆறு ரஸங்கள்கூட தேகஸம்பந்தத்தினுல் மலமாகி

விடுகிறது இப்படியிருக்க தேகத்தைஎப்படிசுத்தமென்று சொல்வது. (31) ($32\frac{1}{2}$) மூக்கு கண்ணு காது இவைகளிலிருந்து எவைகள்பெருகுகின்றதோ அவைகள் மலமென்று பெயர் கண்ணால் பார்ப்பதற்கு கூட யோக்கியமில்லாதது. இந்த ஜீவனுடைய சரீரத்தை வியாதியின் ஸ்வரூபமென்று நினைக்க வேண்டும். (33) வாதம் முதலியவைகளின் மார்பாட்டால் வியாதிகளுக்கு கூடென்று நினைக்கவேண்டும். இந்த ஜீவனானவன் அநேகவிதங்களான ரோகத்தினால் துக்கத்தை அடையுகிறான். (34) கீழ்சொன்ன துக்கங்கள் ஜீவனால் அரியப்படுகிறதுகள் வேறு என்ன சொல்வேன் இப்படிப்பட்ட தேகத்தில் நூற்றிபொன்று மிருத்யு குடிகொண்டிருக்கிறது. (35 அந்த நூற்றிபொன்றில் ஒன்றுக்கு காலமென்று பெயர் மற்றவைகள் குடியிருக்கவந்தவைகள் குடியிருக்கவந்தவைகள் எல்லாம் மருந்துகளால் நிவர்த்தியடையும். (36) ஜபம் ஹோமம் தானம் இவைகளால் காலமிருத்யு நிவர்திக்காது அபமிருத்யுவாக யிருந்தால் கடுமையான வியாதி என்று நினைத்து மேற்கூறியஜபாதிகளால் நிவர்த்திசெய்யலாம். (37) இது விஷயத்தில்

மனிதன் பயப்படாதவனாக யிருப்பவன் அபமிருத்யு விடத்திலும் பயப்படவேண்டாம், ($38\frac{1}{2}$) மானிடப்பிறப்புள்ளவனுக்கு அநேகவிதமனோவியாதிகளும் ஆயுதமும் பாம்பு முதலியவைகளும் கொம்புள்ள பிராணிகளும் நெருப்பும் பில்லிசூன்யம் முதலியவைகளும் மாணத்துக்கு காரணமாகின்றன. ($39\frac{1}{2}$) பாம்புமுதலானமரணகாரணங்களால் பீடிக்கப்பட்டு காலமிருத்தியுவை அடைந்தமனிதனை தன்வந்தரி முதலானவர்களாலும் ஸ்வஸ்தப்படுத்தமுடியாது. ($40\frac{1}{2}$) காலமிருத்தியுவினால் பீடிக்கப்பட்டவனுக்கு மருந்தும் தபமும் தானமும் மந்திரமும் சாந்தி செய்கைகளும் ரக்ஷணமாகாது. ($41\frac{1}{2}$) மிருத்தியுவுக்கு சமதையான துக்கமும் கிடையாது மிருத்தியுவுக்கு சமதையான பயமும் கிடையாது மிருத்தியுவுக்கு சமதையான நடுக்கமும் கிடையாது எந்தபிராணிகளுக்கும் கீழ்கூரியதுகள் ரொம்ப பயங்கரமாயுள்ளது. ($42\frac{1}{2}$) மிருத்தியுவினால் பீடிக்கப்பட்ட மனிதன் பாரிபை பிள்ளை சினேகிதன் ராஜ்யம் ஸம்பத்து ஸுகம் இவைகளைதாண்டி விடுகிறான். ($43\frac{1}{2}$) ஓ ஜனங்களே ஆயிரத்தில் ஒருவன் நடுத்திரமான நூருவயதையாவது அதன் பாதியாவது

ஜீவிக்கிறார்களோ இல்லையோவென்று நினைக்கக்கூடியதா யிருப்பதைபார்த்தீர்களா சிலர் எண்பது வயதிலும் எழுபது வயதிலும் மரிக்கிறார்கள் பூர்ணமான ஆயுளோ அருபதுதான் நிலைக்கிறது அதுவும் நிச்சயிக்கப்படுகிறதில்லை முன்ஜன்மத்தில் செய்த கர்மத்துக்குத்தக்கபடி தான் மனிதனுக்கு ஆயுள்தீர்மானிக்கவேண்டும். 44. 45, (46) இத்தமாதிரி பூர்ண ஆயுளானது அருபது என்று ஏற்பட்டால் அதன்பாதியை ராத்திரியானது எடுத்துக்கொள்கிறது இரவுகாலத்தில் பிணத்துக்கொப்பா யிருக்குறார்கள். வாலிபபருவத்தில் தெரியாத்தனத்தினால் குறையுகிறது கிழட்டுத்தனமான காலத்தில் ஜரையென்னும் அசக்தியினால் குறைவடைகிறது தர்மம் ஆர்தம் காமம் இவைகளில்பற்றேற்படாமலேயே இருபதுவருஷம் செல்லுகிறது திடிரென்று உண்டான பயம் வியாதி வெகுவானத்துக்கும் இவைகளால் பாதி குறைகிறது இவ்வளவு துக்கத்திலிருந்தும் தப்பி ஜீவிதம் மிச்சமாகுமானால் அந்தஜீவிதம்முடியும் பொழுது மரணமென்னும்பெரும்துக்கத்தைஅடையுகிறான். 47. (48. 49) அவ்வவன்செய்தகர்ம வினைக்குத்தக்கபடி யோநியாகிர பாழும்கிணற்றில் பிறக்கிறான் அப்படி

பிறப்பதானது ஒருதேகத்தினால் ஸூக துக்கங்களை அனுபவித்து முடிந்ததும் மற்றொருதேகத்தை எடுக்கிரான் அதிலுள்ள ஸூக துக்கங்களை அனுபவிக்கிரான். [50]

---

## சிவதத்துவ ஸூதாநிதியில் பதினோராவது அத்தியாயத்தில் 50-வதுசுலோகம் முதல் முனதுடர்ச்சியாக ஸம்ஸாரதூஷணம்.

ஓர் மனிதனுக்கு தான்குடியிருப்பு வீட்டில் இடையூரில்லாத வரையில் அதில் அபிமான மடைந்து இதில் அபிமானம் குரைந்தால் குடியிருப்புக்கு வேரு வீடு பார்ப்பதுபோல் ஏதோ ஒரு கருமத்தில் பலனை அனுபவிப்பதற்காக இந்த தேகத்தை எடுத்துக்கொண்டவன் இதில் அனுபவிக்கவேண்டிய பிராப்தமென்னும் கருமம் நசித்தவுடன் மற்றொரு கரும பலனை அனுபவிக்கவேண்டி மருபடியும் வேரு வீட்டை குடியிருக்க அடைவதுபோல் வேரு தேகத்தை அடைவதுதான் மரணமென்று கூரப்படுகிறது ஆகையால் மரணமென்

பது தேகத்துக்கே தவிர ஜீவனுக்கு மரணமென்ப தில்லை. (50) பெரியரோகத்தை அடைந்தவன் தேகத்தின் உபத்திரவத்தை அடைந்து எவ்விததுக்கத்தை அடைகிறானோ அதற்கு சமானமான துக்கம் மரணத்தில் கூட கிடையாது. (15)

இறந்துபோன பிறதுபிரேத சரீரத்தைக்கண்டு ஒ! தகப்பனே? ஏ புத்திரனே! ஏ பத்தினியே! என்றுஇம் மாதிரி அழுதுகொண்டிருக்கும்பொழுது ஸர்ப்பமானது தவளையை பிடிப்பதுபோல் எமன் பிடித்து விழுங்குகிறான். (52) பந்துக்களாலும் சிநேகிதர்களாலும் சூழ்ந்துகொள்ளப்பட்டு காலனுக்கு வசமான மனிதன் கூட ஆசையை விடுகிறதில்லை. (53) மரணாவஸ்தையை அடைந்தவன் உலர்ந்து போன முகத்தினால் நீண்ட நாயும் சுடுகைபாயும் பெருமூச்சுவிட்டுக்கொண்டு கால்களையும் கைகளையும் புரட்டிக்கொண்டு அழலுகிறார்கள், (54) கொஞ்சநேரம் கட்டிலிலும் கொஞ்சநேரம் பூமியிலும் திரும்பகட்டிலையும் திரும்ப பூமியையும் விரும்பிக்கொண்டு இடிப்பினில் துணியில்லாதவனாய் லஜ்ஜையை விட்டவனாயும் மல மூத்திரங்களால் பூசப்படுகிறான் (55) தாகத்துக்கு தண்ணீர் வேண்டு

மென்று நினைக்கிறான் மனதில் நினைத்ததை சொல்ல முடியுவதில்லை நெஞ்சு உதடு கன்னம் இவைகள் உலர்ந்து போய் விடுகிறது நாக்கை நீட்டுகிறான் (56) பசிதாகங்களைகூட நினையாமல் அதிககஷ்டப்பட்டு ஸம்பாதிக்கப்பட்டபணமானது நான் இறந்த பிறகு யாரைச்சேருமோவென்று பணத்தைபேநினைக்கிறான் (57) விவேகமுள்ளவனுக்கு தேகி என்னும் வார்த்தையை கேட்டவுடன் தேகமானது சுருங்குகிறது ஆகையால் மரணத்தை காட்டிலும் யாசகமென்பது அதிக கஷ்டமாகத் தோன்றுகிறது. (58) மரணத்தினால் ஏற்படும் துக்கம் கொஞ்சம் யோசனையினால் ஏற்படும் துக்கம் அதிகம் என்பதுக்குஓர் உதாஹரணமுண்டு, உலகங்களுக்கு ஈசனாயிருந்தும் மகாவிஷ்ணுவானவர் யாசகராகயிருந்ததனாலேயே குள்ளமான தேகத்தையடைந்தார் (59) எவன் யாசகத்தை அடையவில்லையோ அவனைக்காட்டிலும் வேறு எவன் அதிகமவான் நான் இந்த விஷயத்தை நன்றாய் அறிந்து கொண்டேன் யாசகமென்பது ரொம்பவும் துக்கத்துக்கு காரணமாயுள்ளது. (60) புத்திமானாயிருப்பவன் இதரனை யாசிக்கக் கூடாது ஆசையென்பதுதான் யாசகத்துக்கு கார

ணம் தனத்தை சம்பாதிப்பதிலும் துக்கம்தான், சம்பா தித்த பொருளை காப்பதிலும் துக்கமே. (61) அந்த பொருள் அழிந்தாலும் குறைந்தாலும் துக்கம் தான் துக்கத்திற்கு காரணமான இந்தபொருளை கொளுத்த வேண்டும். அதிக சிரமப்பட்டு சம்பாதித்தபோதிலும் தனம் பிரயோஜன மில்லாதது. (62) ஸம்பாதித்த பொருளில் கொஞ்சமாவது தர்ம்மத்தின் பொருட்டு யாதாயொரு பிராமணருககும் கொடுக்கவில்லை அல்ல து பெண்டு பிள்ளை பந்துக்களுக்காவது அனுபவிக்கும் படி கொடுக்கவில்லை (63) நானும் நன்றாய் புசிக்க வில்லை பணத்தை பார்த்துக்கொண்டே சந்தோஷ மடைந்தேன் இந்த வீட்டிலேயே பூமியில் பள்ளந் தோண்டி புதைத்துவைக்கிறேன். (64) எந்த மனித னும் அரியமுடியாத யிடத்தில் புதைத்திருக்கிறேன் ஏனென்றால் வெகுகஷ்டமடைந்துசம்பாதித்த பணமல் லவா. [65] இப்படிகஷ்டப்பட்டு சம்பாதித்த பண தை விட்டு விட்டு நான் எப்படி எமன்வீட்டிற்குப்போ வேன் என்று இவ்விதமாக காலம் சமீபித்திருக்கும் பொழுது அழுகுரான். (66) தன் அங்கங்களால் பூமில் புரண்டு கொண்டு எமனுடைய பாசமென்னும் கயிற்றால் கழுத்தில் சுருக்கிட்டு இழுக்கும்பொழுது

தொண்டையில் குரு குரு வென்று சத்தம் ஏர்ப்பட்டு பந்துக்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே மரிக்கிறான். (67) அப்பொழுதுஜீவனானவன் வேறு தேகத்தை கர்மவாசனையால் பிடித்துக்கொண்டு முன்சரீரத்தை விடுகிறான் எப்படியானால் ஒரு அட்டை யென்னும் புழுவானது எதிரிலுள்ள புல்லைபிடித்துக்கொண்டு முன் பில்லை விடுகிறதோ அதுபோல் இந்தஜீவன் என்று அரியவும். [68] துக்கங்கள் நிறைந்த இந்ததேகத்தில் எவர்கள் பண்டிதர்களாயினும் அபிமானத்தைவைக்கிறார்களோ பிறப்புமுதல் இறப்புவரையில் எப்பொழுதும் துக்கத்தையே அடைகிறார்கள் [69] ஸர்வரோகங்களுக்குள் பசியென்பதே பெரும்வியாதி அந்த ரோகமானது அன்ன மென்னும் உயர்ந்த மருந்தினால் நிவர்த்தியடைகிறது. [70] பசியென்னும் ரோகத்தினலுண்டாகும் துக்கமானது மிகவும் கடுமையானது சரீரத்தில் பலக்குறைவுண்டாகிறது மற்ற வியாதிகளால் கூடமரிக்காதவன் பசியால் பீடித்து மருக்கிறான் (71) இம்மாதிரி பசியால் பீடிப்பவர்களுக்கு அன்னமென்பது மருந்தாகுறது வாஸ்தவத்தில் பண்டிதர்கள் இதை ஸுகமென்று நினைக்கமாட்டார்கள். (72) எவ்வித

சேஷ்டையும் செய்யாமல் அக்ஞானமென்னும் இரு
ளால் மூடப்பட்டு மரித்துப் படுத்திருப்பவனுக்கு எங்
கிருந்து சுகமுண்டாகும். (73) விழித்துக்கொண்
டிருப்பவனுக்காவது சுகம் கிடைக்குமோ வென்றாலு
மில்லை மேல் மேலாக காரியங்களில் பற்றுதலும் கிருஷி
வியாபாரம் பிரபுசேவை மாடுமேய்ப்பது முதலான கிர
மங்களேற்படுவதால் சுகமுண்டாகாது. (74) சுகத்
தையடைய காலதேசங்களை கிடையாது அதாவது
காலையில் மல மூத்திர பாதைகளாலும் மத்தியானத்
தில் பசிதாகத்தினாலும் திருப்தியாக இருக்கும்
பொழுது காமத்தினாலும் ராத்திரியில் தூக்கத்தினாலும்
பிராணிகள் கட்டுப்பட்டிருக்கிறார்கள். (75) மார்கழி
தை யென்கிற ஹேமந்தருதுவில் குளிர்ச்சியால் துக்கமு
ம் ஆனி ஆடி என்கிற கிரீஷ்மருதுவில் கடும்வெய்யத்தி
னால் துக்கமும் ஆவணி புரட்டாசியென்கிற வருஷருது
வில் காற்றுமழையால் துக்கமும் இவ்விதமிருக்க எப்படி
சுகமுண்டாகும். (76) தேகமுள்ளவர்களுக்கு எம
னிடத்திலிருந்து எப்படி பயமுண்டாகிறதோ அது
போல் பணமுள்ளவர்களுக்கு திருடர்களிடத்திலிருந்
தும் ஜலத்திலிருந்தும் நெருப்பிலிருந்தும் தன்பந்துக்க
ளிடமிருந்தும் அரசனிடமிருந்தும் பயமுண்டாகிற

148348
-600 008.

து. (77) எப்படி பக்ஷிகளால் ஆகாயத்திலும் புலிகாடிகளால் பூமியிலும் மாம்ஸம் புசிக்கப்படுகிறதோ மீன்களால் ஜலத்தில் ஆகாரம் புசிக்கப்படுகிறதோ அது போல் எவ்விடத்திலும் பணமுள்ளவன் புசிக்கப்படுகிறான். (78) தனமானது மோகப்படுத்துகிறது ஆபத்தில் தாபத்தையுண்டுபண்ணுகிறது சம்பாதிக்கும் காலத்தில் சிரமப்படுத்துகிறது ஆகையால் எவ்விதம் பணம் சுகமாகும். (79) எவன் பணத்தில் அதிக ஆசைக்கொண்டவனே எவன் பணத்தில் ஆசையில்லாதவனே இவ்விருவர்களுள் பணமுள்ளவன் துக்கமடைகிறான் பணத்தில் ஆசையில்லாதவன் அதிக சுகமடைகிறான். (80) கிருகஸ்ததர்மத்திலிருப்பவனுக்கும் விவாகம் செய்துகொண்டது முதல் புருஷனுக்கும் ஸ்திரீக்கும் கடுமையானதுக்கமேற்படுகிறது கர்ப்பத்தை தரிப்பதினாலும் பிரஸவிப்பதனாலும் குழந்தைகள் நிமித்தமான தோஷங்களாலும் வீட்டுவேலைகளாலும் துக்கமேற்படுகிறது. (81) ஹா! கஷ்டம் குழந்தைக்கு மாந்தம்வந்துவிட்டதே நான் என்ன செய்வேன் பண்ணையிலிருந்து மாடு கன்றுகள் நசித்துவிட்டதுகள் பயிர்கள் அழிந்ததுகள் சேவகர்கள் ஓடி விட்டார்கள் என்று இவ்விதம் துக்கமுண்டாகுறது. (82)

நமது வீட்டைத் தேடி அதிதிகள் வந்துவிட்டார்கள் வீடோ இடிந்து ஓட்டையாகவுமிருக்கிறது என் பாரியையோ கைக்குழந்தைக்காரியாக யிருக்கிறுள் ஒவ்வொருநாளும் இம்மாதிரி இருந்தால் நான் என்னசெய்வது. (83) எனது கன்னிகையை தானம் செய்ய வேண்டியகாலம்வந்துவிட்டது பெண்ணுக்கு ஒத்துமையானவனுக புருஷன் வரவேண்டுமே இதுவே எனக்கு ரொம்பவும் கவலையாகயிருக்கிறதே என்று இம்மாதிரியாக குடும்பத்திலிருப்பவனுக்கும் பெரிய துக்கமுண்டாகிறது; (84) குடும்பகவலையை அடைந்த புருஷனுக்கு நல்ல ஒழுக்கமும் நல்லகுணங்களும் ஞானமும் ஈரமாயுள்ள மண்குடத்தில் நிரப்பிய ஜலம்போல தன்தேகத்தோடே அழிந்து விடுகிறது. (85) ஸர்வ பிராணிகளுக்கும் தன்னைச்சேர்ந்தவர்களிடத்திலிருந்து பெரும்பாலும் பயம் உண்டாகிறது ஒரு எச்சிலிலை நிமித்தமாக நாய்களுக்கு ஏர்ப்படும் சண்டை போல் பயமுண்டாகிறது. (86) அரசனுயிருந்தாலும் கஷ்டப்படுகிறுன் யானை குதிரை சேனை ஆயுதங்கள் இவைகளால் தான் தனக்கு பலமேர்ப்படுகிறதே தவிற தன்னைத்தானே கார்த்துக்கொள்ள முடியுகிறதில்லை எவ்விதம் ஸுகமுண்டாகும். (87) யுத்த

காலத்தில் ஆயிரம்கையை அடைந்த கார்த்த வீர்ய மகாராஜாவுக்கும் பரசுராமன் என்கிற ரிஷிகுமாரர் எதிரியானார் அந்த பரசுராமனுக்கும் தசரதராமன் எதிரியானார் தசரதராமனும் அநேகராக்ஷஸர்களைக் கொன்று பெரிய கீர்த்தியடைந்தவராயினும் கிருஷ்ணனாக அவதரித்தகாலத்தில் ஜராஸந்தனென்பவன் எதிரியானான் அந்த ஜராஸந்தனும் பீமசேனனால் எதிர்க்கப்பட்டு நசித்தான். அந்த பீமசேனனும் ஹனுமாரிடமிருந்து அவமதியடைந்தான் அந்த ஹனுமாரும் சூரியனால் தள்ளப்பட்டு பூமியில் விழுந்தான் அந்த சூரியனும் மேகங்களால் மறைக்கப்படுகிறான் அம்மேகங்களும் காற்றினால் நசிக்கிறதுகள் அந்த காற்றும் மலைகளால் ஜயிக்கப்படுகிறது அம்மலைகளோ நெருப்பினால் கொளுத்தப்படுகிறது அந்த நெருப்போ ஜலத்தினால் அணைந்து விடுகிறது அந்த ஜலமும் சூரியனால் உலர்ந்து விடுகிறது அந்த சூரியனும் ஜலமும் இந்திரனும் எல்லா தேவர்களும் பிரம்மதேவனுடைய பிரளயகாலத்தில் நசிக்கிறார்கள். 88 89 90 91 92 93

அந்த பிரம்மதேவனும் எல்லா தேவர்களோடு கூட நூருவயது முடிந்ததும் சிவபெருமானால் அழிக்கப்படுகிறார், (94) குறையற்றவனாய் உலகங்களுக்கு

னைசனயிருக்கும் பரமாத்மாவான சிவனைத் தவிர இந்த ஸம்சாரத்தில் எவனுக்கும் பலமென்பதே கிடையாது. (95) எதோ ஒருகாலத்தில் யாரோ ஒருவருக்கு பலம் பிரபாவமென்பது ஆச்சரியப்படத்தகுந்ததாக யிருக்கிறது தேவர்கள் அசுரர்களால் சிலகாலத்திலும் அசுரர்கள் தேவர்களால் சிலகாலத்திலும் அபஜயமடைகிறார்கள். (96) இம்மாதிரி ஒருவருக்கொருவர் பல முள்ளவர்களால் ஜயம் அபஜயம் இரண்டும் அனுபவிக்கப்படுகிறது. ஆகையால் ராஜ்ஜியத்திலும் சண்டை சமாதானமென்கிற விசாரத்தால் பயமுண்டாகிறது சுகம்கிடைப்பதில்லை. (97) பிள்ளையினிடமிருந்துங் கூட எந்த இடத்தில் பயமுண்டாகிறதோ அந்த யிடத்தில் சுகமென்பது எது. அரசனகயிருந்தும் உலகத்திலுள்ள வஸ்திரங்கள் எல்லாம் தனக்கு சொந்தமாகயிருந்தாலும் தான் அணிவது இரண்டுவஸ்திரமேதான் ஸர்வதேசங்களிலுள்ள வயல்கள் சொந்தமாயினும் பயிருதான்னியங்கள் சொந்தமானலும் தான் புசிப்பது ஒருபடி அன்னமே அனேகவாகனங்களிருந்தும் தான் ஏறுவது ஒன்றுதான் அதுபோல் படுக்கையும் ஒன்றுதான் மற்றவைகள் துக்கத்தைதான் உண்டுபண்ணுகிறது. ஏழுகட்டுவீடு சொந்

தமாயிருந்தாலும் தனக்கு ஒருமஞ்சம் மாத்திரந்தான் பயனுகிறது அநேகம் நதிமுதலியவைகளிலிருந்தாலும் ஒரேகுடம் ஜலம்தான் பயனுகிறது மற்றவைகள் துக்கத்தை உண்டுபண்ணுகிறதுகாலேவேளையில்அரண்மனையில் செய்யப்படும் வாத்திய கோஷங்களெல்லாம் நகரத்தில் வசிக்கும் எல்லா ஜனங்களுக்கும் பொதுவாகதானிருக்கிறது என் அரண்மனையில் வாத்திய கோஷங்கள் நடக்கிறதென்பது அரனின் அபிமானமே தவிர வேரு இல்லை. ஆபரணங்களனைந்து தேகத்துக்கு பாரம் தேகத்தில் பூசிக்கொள்ளும் சந்தனம் முதலியவைகளெல்லாம் மலமாகிறது இவ்விதமாக காரணமும் மற்ற விவகாரங்களும் பித்தம்பிடித்தவனுடைய நடைக்கு ஒப்பாகிறது. இப்படிப்பட்ட ராஜ்யபோகங்களால் எவ்விதம் சுகமுண்டாகும். 98 99 100 IOI 102.

அரசர்கள் ஒருவர்க்கொருவர் ஜயம் வேண்டுமென்று மனக்கவலையடைந்திருக்கிருர்கள் பெரும்பாலும் நகுஷர் முதலான மகாபலமுள்ள அரசர்கள்கூட மனத்தினுல் கர்வ மடைந்திருக்கிரார்கள். (103) சில அரசர் சுவர்கம்போனுர்கள் அவர்களுக்கு எவ்விதம் ஸம்பத்தை அடைவார்கள் சுவர்க்கலோகத்தில் தான் எவ்விதம் சுகமேற்படும். (104) சுவர்கலோகத்

தில் வாஸம் செய்துக்கொண்டிருந்தாலும் தேவர்களு க்குள் ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் புண்ய கருமத்துக்குத்தக்கப்படி மேன்மேலான யோகங்களை அடைந்திருக்கிறார்கள் அவ்வனைவர்களும்புண்யங்களைக் குறைத்துக்கொள்ளுகிறார்கள், (105) புண்யம் குறைந்தவுடன் திரும்பவும் சம்பாதித்துக் கொள்ள லாமென்றாலும் சுவர்க்கலோகத்தில் கருமம்செய்யும் அதிகாரம் கிடையாது. வேருடன் பிடுங்கப்பட்ட மாம்போல் கீழேதான் விழவேண்டும் (106) புண்ய த்துக்கு மூலமாயிருக்கும் கருமம் குறைந்ததும் சுவர்க்க லோகவாஸிகளா யிருந்தும் பூமியில்பிற க்கிறார்கள் சுகத்தைவிரும்பி போகத்திலாசை கொ ண்டு சடோசியாய் துக்கத்தையே அடைகிறார்கள் (107) தேவர்களுக்கும். கீழே விழுவதென்பது பெ ரியதுக்ககரமாகிறது ஆகையால் நன்கு விசாரிக்கு மள வில் சுகமேகிடையாது 108) சுவர்கலோகத்துக்கு ரிய கருமங்களின் குறைவினாலேர்ப்படும் துக்கத் தைவிட நரகத்தில் அனுபவிப்பது அதிக கஷ்டமாக யிருக்கிறது. (109) அதிகோரமான நான் குவிதபாவங்களால் வாக்கு மனது தேகம் இவை களால் செய்யப்பட்டவைகளால் அதிக துக்கமுண்டா

கிறது. தாவரஜாதியாய் மரம் மட்டைகளாக பிறக்கு ரார்கள் அந்தப்பிறப்பிலும் கோடாலியால் பிளப்பதும் தோல்களை செதக்குவதும் கடோரமான பெருங்காற் றினுல் இலைகள் கிளைகள் பழங்கள் இவைகள் உதிரு வதும் யானை குதிரை மனிதர்கள் இவர்களால் அடி யோடு வெட்டுவதும் ஒன்றோடொன்று உரைவதும் காட்டுத் தீயால் எரிவதும் இதுபோன்ற அநேக துக் கங்கள் தாவரஜாதியிலு மேற்படுகிறது. (110. 111, 111½) ஸர்ப்பஜாதியில் பிறந்தாலும் அதிக துக்க முண்டாகிறது பசிதாகம் கோபம் இவைகளால் அதிக பீடையும் துஷ்டர்களால் அடிப்படுவதும் கயிற்றுனல் கட்டுப்படுவதும் திடீரென்று மரணமும் திடீரென்று ஜனனமும் பாம்பாய் பிரந்தாலும் இவ்வித துக்கமே தான். (112, 113, 113½) மிருகஜாதியில் பிறந்தா லும் மழை வெய்யல் குளிர் இவைகளால் பீடையும் பசிதாகம் சிரமம் இவைகளால் தாபத்தை அடையுகுரா துகள் மழை குளிர்களில் ஓடுவதிலும் அடித்தல் கட்டு தல்களால் உபத்திரவமும் ஜாட்டிக்கொம்பு தாத்துக் கோல் முதலியவைகளால் அடிக்கப்படுவதும் கொம்பு கொடி ஆயுதம் சங்கிலி முதலியவைகளால் பீடையும் பாரம் இழுப்பதுனல் சிரமமும் சிக்ஷித்தலாலும் யுத்த

த்தினுலும் பீடையும் தன் கூட்டத்தைவிட்டு பிரித லும் ஓடாமறிருக்க சங்கிலியுடன் விடுதலும் பசு யானை முதலான மிருகஜாதிகளுக்கும் இவ்விதமான துக்க முண்டாகிறது. (114) (115) (116) (117½) மனித களுக்கு கர்ப்பவாசத்திலேயே பெரியதுக்கம் பிறப்பி லும் துக்கம் அரியாத்தன்மையால் குழந்தை பர்வத்தி லும் துக்கம் குமாரபருவத்திலும் குருவினிடமிருந்து சிக்ஷையை அடைவதினுல் துக்கம் யௌவன காலத்தி லும் காமம் ஆசை இவைகளில் துக்கம் பயிர்சிலவு வியாபாரம் முதலிய வேலைகளால் துக்கம் வயது முதி ர்ந்த காலத்திலும் கிழட்டுத்தனத்தாலும் வியாதிகளா லும் துக்கம் மரணத்தினுலும் பெருந்துக்கம் யாசகத் தினுலும் துக்கம் அரசன் நெருப்பு, ஜலம், பந்துக்கள், திருடன் ஆயுதம் இவைகளால் அதிக துக்கம். (II8) (II9) (I20) (I2I) பணத்தை சம்பாதிப்பதிலும் பாதுகார்ப்பதிலும் துக்கம் அழிந்தாலும் குறைந்தா லும் துக்கம் அதிக ஆசை கார்ப்பண்யம் சிலவழிக்க இஷ்டமில்லாமலிருத்தல் கர்வம் மதம் அகாரியம் செ ய்யத்துணிவு இவைகள் பணமுள்ளவர்களுக்கு துக்க மாக முடிகிறது பயிரு சம்பளம் பிரபுசேவை வட்டி

வாங்குவது இவைகள் தன் சொதந்திரத்தை குறைக்கிறதுகள். (122 (123)

இஷ்டங்கள் கிடைக்காமலும் அனிஷ்டங்கள் வருவதும் பஞ்சம் வருவதும் பாக்கியம் தொலைவதும் மூடத்தனமுண்டாவதும் தரித்திரம் உண்டாவதும் உயர்வு தாழ்வு என்பதும்பட்டணம் ராஜ்யம் இவைகளின் கலகமும் ஒருவருக்கொருவர் அவமதிப்பால் ஏர்ப்படும்துக்ககமும் யாருக்குமுள்ளது. 124, 125. உள்ளும் புரமும் கோபத்தை அடைவதால் அரசர்களுக்கு துக்கம் ஒருவர்குறைவு ஒருவர் உயர்வு என்கிர வித்தியாஸத்தினாலும் ஸ்வபாவத்தினாலும் யோகங்கள் குறைவினாலும் துக்கமுண்டாகிறது. [126] புண்யம்குறைந்தால் தேவர்களுக்கும் துக்கமுண்டாவதுடன் அநேகவிதமான ஜன்மங்களெடுக்கிரார்கள். (127) தேவலோகத்தில் கூடதேவர்களுக்கும் வியாதி உண்டாகிரதுசந்திரனுக்கு க்ஷயரோகமென்பது உலகப்பிரசித்தமானது. [128] ஸூரியனுக்கு குஷ்டம் வருணனுக்கு ஜலோதர ரோகம் பூஷாஎன்பவருக்கு பல்நோய்இந்திரனுக்கு மறத்துப்போன கை என்கிரரோகம் யக்ஞமென்கிர தேவதைக்கு தலை யறுந்துவிட்டது அதை அசுவினீதேவர்கள்

ஒன்று சேர்த்தார்கள் அந்த துக்கத்தினல் யக்ஞதேவ ருக்கு சிரோரோகமென்பதும் இம்மாதிரியான துக்க ங்களுண்டாகிறது. 129, [130] பாரர்தமென்கிரகண க்குப்படி இரண்டுகொண்ட பிரம்மதேவனுடையஆயுள் முடிவில் பிரம்மதேவனுக்கும் துக்கமுண்டாகிறது மகா விஷ்ணுவுக்கும் இரப்பு பிரப்பு மாயாவித்தனமும் துக் கமானது. [131] ஸ்திரீவிஷயமான கொழுப்பும் கா மத்தில் அதிக சக்தியும் தேரோட்டுவதும் துஷ்டர் களால்கட்டுப்பட்டதும்மதிப்பானதும் கௌரவகுண வு அடைந்தபடியால் அதிக துக்கமுள்ளவருனர் [132] இவ்வித மானரோகம் முதலிய தோஷங்களால் தேவர் தள்கூட மோகமடைந்தார்கள் ஒவ்வொரு கல்பங்களி லும் பிரஸித்திப்பெற்ற தேவர்களுக்குக்கூட நாசமுண் டாகிறது. (133) எவ்விடத்தில் காமக்குரோதங்கள் இருக்கின்றனவோ அவ்விடத்தில் ஆத்மாவுக்கே தோ ஷங்களுண்டாகின்றன. அவ்விடத்தில் தான் அதிகதுக் கமிருக்கிறதுகள். (134) துக்கங்கள்யாவும் இவ்வித மாகவேயுள்ளது. துக்கத்தினலேயே ஒழிவடைகிறது இவ்விததுக்கங்களால் தாவர ஜங்கமமென்கிர லோகங் கள்பாவப்பட்டிருக்கிறது. (135) இவ்விதஉலகதுக்

கங்களைக்கடந்தவரான பரிபூர்ணரான சிவன்தான் முக்தியைக்கொடுப்பவர் மனிதர்களுக்கு ஸம்ஸார மென்னும் கடலிலிருந்து ரக்ஷிப்பதற்கு அந்த ஜகன்னுதரான சிவனிருக்கிறுர், (136) வியாதிகளைப்போக்க மருந்து எவ்விதம் சத்துருவாக யிருக்கிறதோ அது போல் ஸம்ஸாரதோஷங்களைப்போக்க சத்துரு வாக சிவனிருக்கிரார். (137) போகம் மோக்ஷம் இரண்டையும் கொடுக்கக்கூடிய பரமசிவனை அரிந்தால் மோக்ஷமுண்டாகிரது ஆகையால் ஆத்மவிசாரம் செய்தால் ஸம்ஸாரதோஷம் நசிக்கிரது. (138) ஆகையால் ஓ ஸனத்குமாரரே சிவனுடைய தத்துவத்திலேயே மனதை செலுத்தினுல் ஸம்ஸாரக் கடலைத்தாண்டுகிரான். ஆகையால் நீரும் சிவனை அரியவேண்டும் ஸம்ஸாரத்தில் புத்தியை செலுத்தக்கூடாது. (139) ஸாரமில்லாத இந்த ஸம்ஸாரததில் ஸுகம் கிடையாதென்பது நிச்சியம் நன்றுய்விசாரித்து பார்த்து ஸம்ஸாரத்தை பிரியமென்று நினைக்காமல் சுகமடைவீராக, (140

இவ்விதம் ஸ்காந்தத்தில் ஸனத்குமார ஸம்ஹிதையில் மலயாசல கண்டத்தில் சிவதத்துவ சுதாநிதியில் ஸம்ஸார ஸ்வரூபணமென்கிற 11-வது அத்தியாயம் முடி

1483468
சென்னை-600 008